[1987 ஏப்ரல் 23]

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி வட்டம், தென்கரை கண்மாயை சீர் செய்தல்

473—(*வினா எண். 12244) திரு. ஆ. சந்திரசேகரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், தென்கரை கண்மாயை ஆழப்படுத்தி சீர்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. ஆ. சந்திரசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாடிப்பட்டி வட்டம், தென்கரை கண்மாயை ஆழப்படுத்தி பல ஆண்டுகள் ஆகிவிட்டன. பல ஆண்டுகளாக தூர் எடுக்கப்படாததால் நீர்பிடிப்புப் பகுதி மிகவும் மேடாக இருக்கிறது. கரையும் மிகவும் பழுதடைந்திருக்கிறது. ஆகையால், பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி அளிக்கக்கூடிய அந்த கண்மாயை தூர் எடுத்து, ஆழப்படுத்துவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இது பெரியாறு நீர்ப்பாசனத் திட்டத்திற்கு உட்பட்டிருக்கிற முறைப்பாசன கண்மாய். அங்கே தண்ணீர் எப்போதும் புரண்டு கொண்டிருப்பதால் மிகப்பெரிய கோரிக்கையாக எதுவும் வரவில்லை. இருந்தாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தில் இருக்கின்ற இதுபோன்ற கண்மாய்களைச் சீரமைத்து, ஆழப்படுத்தி, கரைகளைப் பலப்படுத்தவேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஆண்டில் 400 கோடி ரூபாய்க்கான திட்டத்தைத் தீட்டவேண்டுமென்று துறைக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய முயற்சிகளை நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 11—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]